முருகப்பெருமான் துணை

**மகான் கலிக்கம்ப நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.02.2023, புதன்கிழமை

1. ஞானபலம் மக்களுக்கு அருளி
ஞானிகளாக மனிதர்களை மாற்ற
ஞானபண்டிதனார் சக்தியாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சால்திங்கள்
வரங்களென தச திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 10 ம் நாள், 22.02.2023 புதன்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை கலிக்கம்ப நாயனாரும்
அகிலம் மேன்மைபெற உரைப்பேன்
ஆசிதந்து தீட்சை தந்து அருளும்
அரங்கன் வழி மகாசக்திகளும் இணைந்தருள
4. அருளவே உலகமக்கள் எல்லாம்
அரங்கன் குடில் நோக்கி வந்து
அருளெனும் அமுதுண்டு இனிதே
அடிபணிந்தேன் முழு சரணாகதி ஆக
5. ஆகயென தொடர்ந்து வர
ஆற்றல் பெருகி நன்கு
மிகையான ஞானவான் படை
மண்ணுலகம் முழுக்க அடைந்து
6. அடைந்துமே ஞான ஆட்சி
ஆளுமை தலைமை என
தடையற அனைத்துமே மாறி
தவராஜன் ஆசியால் உலகம்
7. உலகம் தனித்துவம் காணும்
உண்மைபட இந்த ஞானப்படைகள்
உலகமெல்லாம் பெருகப் பெருக
உலகமாற்றம் சடுதி நிகழும்
8. நிகழவே கலியுக மக்களிடை
நீதி நேர்மை நிம்மதி என
வகையான சகல நற்குணமும்
வரமாக வந்து மாற்றம் காணும்
9. காணவே தரும சாலையென
கலிதனில் அரங்கன் பேரில்
ஞானம்தர உருவான அனைத்து
நற்கிளைகளும் அன்னதானமுடன்

10. அன்னதானமுடன் பசிபிணி விரட்டி
அறிவிப்பேன் பூரணத்துவமிக்க
அண்ணல் அரங்கன் பேரிலே
அனுதினமும் பூசைகள் தொடர
11. தொடரவே வினைகள் விலகி
திருவருளாக குருவருள் பலம்
இடர் வென்று மீட்டருளும்
இயம்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–